Registered as a News Paper in Ceylon
P M G No. H A
59/300 of 1939,

உ

# இந்துசாதனம்

விரோதி வருஷ
( 1889 )
ஆவணி மாதம்
28-ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கர௵ ஆவணி௴ ௫௳ செவ்வாய்க்கிழமை (21 ஆகஸ்ட் 1951) [இல.-௩௮]

## அறவாழ்வு

II

அறவாழ்வைக் கண்டோம். அவ்வாழ்வை வாழ வழியை வகுத்தளித்து நிற்கும் நூல்களைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். சங்கத் தமிழ் நூல்களைக் கற்குங்கால் ஒரோ வழி நின்று வீண்வாதம் புரியாது, பொதுக்கண்கொண்டு ஆராய்வோர்க்கு, இன்பம்பற்றியே மிகுதியும் வற்புறுத்தும் பாடல்களைக் காண்பர் என்பது தெளிந்தவுண்மை. சங்கத்தமிழ்நூல்களில், அறம்பற்றிய செய்யுட்கள் 1528-ம் பொருள் பற்றிய செய்யுட்கள் 1523-ம் (இல்லறம்) காதலின்பம் பற்றிய செய்யுட்கள் 2494-ம் உளதென ஒருவாறு பெறப்படும். இல்லற இன்பம்பற்றிய செய்யுட்களே மிகுதியாக இடம் பெற்றுள்ள காரணம் என்ன? என்பதே ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரிய ஒன்றாகும். அன்பின்வழி நின்றே அறம் வளர்ந்ததென்பதை ஆராய்ந்து பார்ப்போர் நன்குணர்வர்.

உண்மை அன்பு இன்றிப் பகட்டுக்காகச் செய்யும் ஆரவாரமெல்லாம் அறமாகா. இதனைத்தானே உலகம் புகழும் உயர்குறள் நூலை அளித்த வள்ளுவப் பெருந்தகையாரும்:

தருமம் செய்பவன் தன் மனத்தினிடத்துக் குற்றமில்லாதவனாக இருக்க வேண்டும். அவ்வளவே தருமமாவது. அக்குற்றமுள்ளவன சொல்லும், செயலுமாகிய தருமங்கள் தன்னை யெல்லோரும் புகழும்படிச் செய்யும் ஆரவார குணமுடையன. அல்லாமல் தருமமென்று சொல்லப்படாதென்பதாம். இதனால் மனம் பரிசுத்தப்படாதவன் செய்யுந் தருமங்களாற் பயனில்லை எனபதைக் காண்க.

"மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற." —குறள்

"இன்பமும் பொருளும் அறனும் என்
றன்பொடு புணர்ந்த ஐந்திணை." [மருங்கு
—தொல்காப்பியர்

எல்லா உயிர்களிடத்தும், எவ்வுயிர்க்கும் எவருக்குந் தீங்குநேராத முறையில பெயர், புகழ்வேண்டி நிற்காது. அறஞ்செய்வாராயின், அவர் செய்யும் அறமே தமக்கும், பிறருக்கும் உண்மையிற் பயன் உடையதாகும். ஆகவே அன்பு ஒன்றே உயிராகக்கொண்டு நடைபெறும் அறத்தை எடுத்து வற்புறுத்தும் ஆசிரியர் தொல்காப்பியனார் தமது சிறந்த கோட்பாட்டிற்கு மாறுபாடில்லாது அவ்வறத்தை ஒன்றாகவே கூறினாரல்லது "இல்லறம்", "துறவறம்" என இரண்டாகப் பகுத்து தாம் இயற்றிய தொல்காப்பியத்தில யாண்டுங் கூறினாரல்லர். இம்மை இன்பம் விழைந்து, தன் மனைவி மக்களோடு ஒருங்கிருந்து நடாத்திய அன்பு வாழ்க்கையும், மறுமையின்பம் விழைந்து மனைவி மக்கள் தமக்குத் தொண்டுசெய்ய இம்மை முயற்சியை விட்டு, இறைவன் திருவருளில் தமது உணர்வினைத் தோய்வித்திருக்குந் தவ வாழ்க்கையும் ஓர் அறத்தினுள்ளேயே அடங்கிய இருவகை நிலைகளாகுமல்லாமல் அவ்விரண்டும் ஒன்றோடொன்று மாறுபட்டன அல்ல என்பதே தொல்காப்பியனார் கருத்தாதல்,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரிசுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே."

என்று எழுதியுள்ள கற்பியல் சூத்திரத்தான் தெற்றென விளங்கா நிற்கும். காதல் அன்பால் துய்ப்பதே காமமாம். அது நிறைந்து கடைக்கொண்ட வாழ்நாள் எல்லையின் கடைக்காலத்தே, தமக்குக் காவலாய் அமைந்த தம் புதல்வரொடு கூடியிருந்து, தாம் அதுவரை செய்து போந்த அறத்தை இனித் தாம் செய்யவியலாமையின் தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்து குடும்பக் கிழவனுங் கிழத்தியும் சிறந்ததாகிய தவத்தில் தமது உணர்வினைப் பயிலச் செய்தல் தாம் அதுவரை நிகழ்த்திப் போந்த காதல்மனை வாழ்க்கையின் பயனும் என்பதை உணர்க. இதுவே மேற்கண்ட சூத்திரத்தின் கருப்பொருள்.

எனவே காதலன்பிற் சிறந்த கணவனும், மனைவியும் ஒருவரை யொருவர் பிரியாதிருந்து, தவஞ் செய்யற்பாலரென்பதையும், அப்போது அவர் தம் புதல்வராயினர் அவர் தவ வாழ்க்கைக்கு வேண்டுவனவெல்லாந் தேடிக் கொடுத்து அவர்க்குத் துணையாக நிற்கற்பாலரென்பதும், அவர்க்குச் சுற்றத்தாராய் உள்ளவர், அவர் தவ வாழ்க்கையில், அமர்ந்த காலந் தொடங்கி, செய்யாதுவிட்ட அறங்களை யெல்லாஞ் செய்துகொண்டிருக்கற்பாலரென்பதும் நன்கு அறியக் கிடக்கின்றன. தொல்காப்பியர் எடுத்துக் கூறிய நற்றமிழ் முதுமக்களின் மனைவாழ்க்கையும், அதன் முடிவில் மேற்கொள்ளப்படுவதாகிய அவர்தந் தவ வாழ்க்கையும் எவ்வளவு சிறந்தனவாய் இருக்கின்றன என்பதைத்தான் உற்று நோக்குமின் அன்பர்களே!

திருந்தாத நெறியுடைய, முன்னைய சமணமும், பௌத்தமும், அவற்றைச் சால்கொண்டெழுந்த வடவர் தம நூல்களும், தவ வாழ்க்கையைத் துறவு நெறியினபாற் படுத்தி மனைவி மக்கள் சுற்றம் முதலிய தொடர்புகளைக் களைந்து, பின்னே தவம் செய்ய உரிமையுடையார் எனக் கூறுகின்றன. தொல்காப்பியமோ அங்ஙனங் கூறவில்லை அல்லவா? இவ்விருவேறு அறவுரைகளுள்ளே எது சிறந்ததென ஆராய்ந்து உண்மை காணுங்கள்! வடவர்கள் தமிழ்மொழியின் சுவையை மாற்றும் பொருட்டு,

(அ. தா. பா. திருஞானசம்பந்தன், திருவண்ணாமலை)

தொடர்ச்சி 3-ம் பக்கம்

உ

## தோத்திரம்

பிறவாத தெய்வம் இறவாத வாழ்வு பேரின்பவெள்ளம் முனிவோர்
துறவாத ஞானம் உமைமாது பாகர் சொக்கேசர் முக்கண் முதல்வர்
நறவார்கடம்ப வனநாதர் நீதி ஞாலம் புரக்கு மதனுல்
மறவாது திங்கள் மும்மாரி பெய்ய மலிகின்ற மேகம் வருமே.

பிறத்தல் (இறத்தல்) இல்லாதவரும், அழிதலில்லாத வாழ்வைத் தருபவரும், பேரின்பப் பெருக்கானவரும், முனிவர்களாயுள்ளோர் இடையறாது தியானிக்கும் ஞானப்பொருளாயுள்ளவரும், மீனாக்ஷியம்மையாரை இடப்பாகத்தில் வைத்தவரும், சொக்கலிங்கமூர்த்தியென்னுந் திருநாமத்தையுடையவரும், மூன்று கண்களைக் கொண்ட முழுமுதற் கடவுளும் வாசனைபொருந்திய கடம்பவனமெனப்படும் மதுரைத்திருப்பதியிற் கோயில்கொண்ட தலைவரும் நீதியோடுகூடியவருமாகிய சோமசுந்தரப்பெருமான் உலகத்தின்கண்ணேயுள்ள உயிர்களைப் பாதுகாத்தருளுதலினால் மாசந்தோறும் மும்முறை மழை தரக்கும் வண்ணம் பொழிவாகிய மேகங்கள் வந்து சேரும் என்பதுபொருள்.

இது நூலிறுதியில் வாழ்த்துக் கூறியவாறும். "மேகம் வரக்கண்டு..." என்பது முதலாக இக் கவியீறாகவுள்ள நூறு கவிகளும் பரஞ்சோதி முனிவர் பாடியருளிய மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதியாகும்; இவ்வந்தாதி இட்ட சித்திகளைப் பெறும்வண்ணம் அன்பர்களாற் பத்தியோடு பாராயணஞ் செய்யப்படுவது; "மேகம்வரக்கண்டு" என்று தொடங்கி "மேகம் வருமே" என முடித்தல் அந்தாதிப் பிரபந்தம் பாடும் மரபென்க. 100.

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் திருவிழாவும்

ஆடி௴ ௨௯௳ (13-8-51) திங்கட்கிழமை யன்று யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலனசபை யாதரவில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை சிறப்பாக நடத்தப்பெற்றது. முற்பகல் மேற்படி சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்திற் கடவுளாராதனை நால்வர் பூசை பெரிய புராணம் வெள்ளானைச் சருக்க படனம் மாகேசுர பூசை முதலியன நடைபெற்றன. அன்றிரவு 7 மணியளவில் சைவத் தெய்வத் திருமுறைகளையும் நால்வர் திருவுருவப் படத்தையும் வெள்ளித் திருவாசி கொண்ட திருப்பீடத்தில் வைத்து பரிமளங் கமழும் அழகிய பூமாலைகளால் அலங்கரித்து அழகான கேடகத்தில் வைத்து வீதிவலமாக மேளவாத்திய சகிதம் எழுந்தருளச் செய்யப்பெற்றன. பள்ளிக்கூட மாணவர்களும் ஏனைய அன்பர்களும் தேவார திருவாசகங்களைப் பக்தியுடன் ஓதினார்கள்; கல்லூரி வீதி, கிராவியடி வீதி, நாவலர் வீதி, காங்கேசன்துறை வீதி, கல்லூரி வீதி வழியே வலம் செய்யப் பெற்றது. மனைகள்தோறும் பூரண கும்பம் திருவிளக்குகள் ஏற்றி அடியார்கள் விழாவைச் சிறப்பித்தார்கள். இந் நிகழ்ச்சி ஒரு புதிய சைவ எழுச்சியை மக்கள் உள்ளத்தில் உதிப்பித்தற்குத் துணையாகவிருந்தது. சுந்தரமூர்த்தி நாயனாருடைய பெருமைகளையும் தொண்டையும் சைவ மக்கள் நினைவு கூர்வதற்கு இவ்விதத் திருவுலாப் பெருந்துணையாக இருந்தது. இத்திருவுலா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்குத் துணையாக விருந்தவர் ஏழாலை சைவப்பிரசாரகர் திரு. மு. ஞானப்பிரகாசம் B. A. யவர். யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை அப்பெரியாருக்கு இவ்வரிய உதவிக்காகப் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றது.

திருவுலாக் காட்சியின்மேல்திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள் நாவலர் மண்டபத்தில் பக்கவாத்திய சகிதம் 'சுந்தரமூர்த்திநாயனார்' என்னும் பொருள்பற்றி ஒரு சிறந்த கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். பிரசாரகர் சுந்தரமூர்த்தி நாயனார் கைலாசத்திலிருந்து பூவுலகில் வந்து திருவவதாரஞ் செய்தற்குரிய வரலாற்றை முதற்கண் எடுத்து விளக்கினர். பின் 1 வேத சிவாகமங்கள் இறைவனுடைய வாக்கென்பது 'தூமறைபாடும் வாயார்' என்ற பெரியபுராணத் திருவிருத்தத் தொடராலும் ஏனைய சைவத் தெய்வத் திருமுறைகளாலும் தெளிவாகக் காணக்கிடக்கின்றனவெனவும், அங்ஙனம் உண்மையிருக்க இக்காலத்தில் சில நவீன ஆராய்ச்சிக்காரர் அவைகள் மனிதராற் றரப்பட்டவையென வாய்கூசாது புகல முன்வந்தமை கவலைக்கிடமான விஷயமெனவுங் கூறினார்கள். இரவு 12 மணியளவில் கூட்டம் மேற்படி சபையினது சமயப்பிரசார அமைச்சரால் பிரசாரகருக்கும் சபையோருக்கும் நன்றி கூறியபின் நிறைவெய்தியது.

### சாராயப் போத்தல்களை வீசிவிட்டு ஓட்டம் பிடித்தல்

சென்றவாரம் பொலிஸ் பகுதியார், வெலிகம புகையிரத ஸ்தானத்திற்சென்று சோரமாகச் சாராயங் கொண்டுசெல்லும் பிரயாணிகளைச் சோதித்தவிடத்தில், ஒரு பிரயாணி வசம் 4 போத்தல் சாராயமிருக்கக் கண்டு போத்தல்களோடு அப்பிரயாணியை அகப்படுத்தினர்; அதனைக்கண்ட இன்னுஞ் சில பிரயாணிகள் புகைவண்டியி லிருந்து குதித்துத் தம்வசமுள்ள சாராயப் போத்தல்களை உடையும்படி வீசிவிட்டுப் பொலிசருக்குத் தப்பி ஓட்டம் பிடித்தனராம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கர ஞு ஆவணி மீ ரு உ செவ்வாய்க்கிழமை

## நல்லைக்கந்தனை வந்தனைசெய்க

"வாசித்துக் காணொ ணாதது பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத
ஓசைக்குத் தூரமானது மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்
யோகத்தைச் சேரு மாறுமெய் ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ
ஆசைப்பட் டேனல் காவல்செய் வேடிச்சிக் காக மாமய
லாகிப்போற் பாத மேபணி கந்தவேளே;
ஆலித்துச் சேல்கள் பாய்வய லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்மயூர துரங்கவீரா;
நாசிக்குட் ப்ராண வாயுவை ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா,
நாகத்துச் சாகை போயுயர் மேகத்தைச் சேர்சி ராமலை
நாதர்க்குச் சாமியே சுரர் தம்பிரானே.

— அருணகிரிநாதர்.

அடியவர் அல்லலைத் துந்தவிர்த்தருளும் நல்லைப்பெருமானே! உன் பெருந் திருவிழா ஆண்டுதோறும் இருபத்தைந்து தினங்கட்கு நடைபெற்று வருவதாகிய இந்தப் புண்ணிய காலம், உன்னை அன்பர்கள் வந்து பணிந்து போற்றி உனது திருவருளைப் பெறுதற்கு வாய்த்த தூய காலமாகும்; உனது திருக்கோயிலில் மகோற்சவமெனப்படும் பெருந்திருவிழாத் தொடங்குதற்கு முந்தியே உன்னடியார் "எப்போது எம்பெருமான் பெருந்திருவிழாத் தொடங்கும்!" என்ற ஆவலோடிருக்கிறார்கள்; தொடங்கிவிட்டாற் பேரானந்தமடைந்து உன்னைத் தேடிவந்து தரிசிக்கிறார்கள், தோத்திரம் பண்ணுகிறார்கள், பணிகிறார்கள்; அங்கப்பிரதக்கணஞ்செய்கிறார்கள்; பத்தியோடு பாற்காவடி கொண்டு வருகிறார்கள்; இவ்வளவோடு அமைந்துவிட்டதா? இல்லை, இல்லை, கருமார்த்தமாக இவ்வூரை விட்டு வேற்றூரிற்சென்று வசிப்பவர்களும், அந்த அந்தவூரிலிருந்தபடி விரதமனுட்டித்துக்கொண்டு உன்னைத் தியானிக்க, நீ அவர்களுக்கும் பூரண அநுக்கிரகஞ் செய்கின்றாய். மாறுபட்டுச் சமர் விளைத்த சூரபன்மனுக்கு அநுக்கிரகஞ் செய்து அவனை ஆட்கொண்டருளிய நீ, ஆருக்குத்தான் அநுக்கிரகஞ் செய்யமாட்டாய்!

கலியுகந் தன்னிலே கண்கண்ட கடவுளாய் விளங்குங் கந்தையா! உன் திருக்கோயில், திருக்கோயில்வீதிகள், திருக்கோயிலுக்கு வரும் மார்க்கங்களெல்லாம் புனிதமாகக் காணப்படுகின்றனவே! இவைகள் புனிதமாகக் காணப்பட, அன்பர்களும் புறம் புனிதராய் உன்னிடம் வர, அந்த அன்பர்களுடைய அகமும் புனிதமாவது ஒரு வியப்பா! இல்லை, உன் திருப்பதியிலே எவரும் வந்து சேர்ந்துவிட்டால், எல்லாங் குகமயமாகவே புலப்படுகின்றன! உன் திருக்கோயிலுக்கு வந்தால், உன் சந்நிதி முன்னின்றால், பெரியார் சிறியார், கற்றார் கல்லார், வறியார் செல்வர், அதிகாரி பணியாளி, உயர்ந்தோர்தாழ்ந்தோர் என்ற பேதமில்லாமல் எல்லாரும் தம்மை மறந்து பரவசமடைகிறார்களே; கோயிலதிகாரி, நகரபரிபாலனத்தினர், சுகாதாரப்பகுதியார் பொலிசர் முதலிய எல்லாரும் தம் கடமையை ஆற்றுவதாகத் தம்மை மதித்த வின்றிச் சிந்தை நெகிழ்ந்து உனக்கும், உன்னைக் கும்பிட வரும் அடியர்க்குந் தொண்டாற்றுவதில் ஈடுபட்டுத் திரியக் காணப்படுகிறார்களே! இது என்ன விந்தை ஐயா! உன் தலத்தைப் பூலோக கைலாசமென்று புகழுகின்றார்களே!

அறுமுகம் படைத்த இறையோனே! தென்னிந்தியாவிலே உனக்கு ஆறுபடை வீடுகளாகிய தலங்களுண்டென்று அறிஞர் கூறுகின்றனர். அப்படியே இந்த ஈழ நாட்டிலும் நல்லைப்பதியும், கதிர்காமமும், செல்வச்சந்நிதியும் உன்படை வீடுகளா? சங்கத்தவர்க்குத் தலையாந் தமிழ்ப் புலவ! பல விபரீதத்தோடு கூடிய காலத்திலே இப்படியான தலங்களிற் கோயில் கொண்டருளி நீ திருவருள் செய்யாதொழியிற் சைவ நற்சமய மெங்கே! செந் தமிழ் மொழிதானெங்கே! முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகோனே! சைவமார்க்கத்தையும், செந்தமிழ் மொழியையும் ஓங்கச் செய்வது நின் கடன; உன்னடியாரை நன்னெறியி லுய்ப்பதும், உன் பாரம் ஐயா! "காக்கக்கடவிய நீ காவாதிருந்தக்கால் ஆர்க்குப் பரமாம் அறுமுகவா"! சிறுமானேந்தும் பெருமான் பங்கில் வருமான் தந்த முருகோனே!

இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறு, உன் சந்நிதிக்கு அடியாரை இழுத்து அருள்புரியும் உனக்குத் தமியேன் மிகையல்லேன் அப்பனே!

"உன்னை யொழிய
ஒருவரையும் நம்புகிலேன்
பின்னையொருவரை யான்
பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர்
கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே"

# உலகம்பலவிதக்கதை

( முற்றொடர் 17 )

"காலத்திற்கேற்ற கோலம்"

சிரித்தபின்பு பத்மநாதன் தனது தங்கையை அன்புடன் பார்த்து "தங்காய், நீ வயசிற் குறைந்திருந்தாலும் புத்தியில் என்னைக்காட்டிலுஞ் சிறந்தவளனை; உன்னிடத்தில் அதிக விவேகமும் உலகியலறிவும் உண்டென்ற வுண்மையை இன்றுதான் உணர்ந்தேன்: ஆங்கிலக் கல்வியறிவு, உத்தியோகம், செல்வம், பேரழகு முதலியன இருக்கின்றன வெனினும், நாதா என்னிடத்தில் உண்மையான காதல் பாராட்டி வருகிறான்; இதமான முறையில் நடாடுகிறாள்; தமிழ் மகளுக்குரிய குணங்களுஞ் செயல்களும் அவளிடத்துள்ளன; அந்நிய நாகரிகத்தை அவள் அதிகம் கைக்கொண்டிலள்; காலத்திற் கேற்ற கோலமென்று நடக்கிறாள்; அவள் எனக்குத் தாரமாவதோடு ஒரு சினேகிதை போலவும், என் உத்தியோகக் கடமைகளில் உதவி செய்யவும் பயன்படுவாள்; நானும் அவளும் தனித்தனி உத்தியோகம் பார்த்தலினால், பொருள் வரவு அதிகமுண்டாகுமாதலினால், வீட்டுப் பணிக்குப் போதிய பணியாளரை வைத்துக்கொள்ளலாந்தானே; இவைகளையெல்லாம் உத்தேசித்தே நான் நாதாவை மணஞ்செய்ய விரும்புகிறேன்; வனசாவிடத்திற் போதிய கல்வியறிவும் காலத்திற்கேற்ற கோலமாக நடக்கக்கூடிய ஆற்றலுமில்லையே யொழிய, வேறு எவ்வகையிலும் வனசாவை நான் குறைசொல்ல முடியாது; ஆனால் வனசா என்னையன்றி வேறெவரையுங் கல்யாணஞ்செய்வதில்லையெனப் பிடிவாதமாக நின்றால், நான் என்ன சொல்வதென்பது எனக்குப் புலப்படவில்லை; நானும் விவாகமின்றி நிதியப்பிரமசாரியாக இருக்க வேண்டித்தான் நேரும் என்று நினைக்கிறேன்; ஆனால் அப்படி இருவரும் வாழ்நாளை அவமே கழிப்பதனால் ஏதும் பயனுண்டோ என்பதை நீயே யோசித்துப்பார்; இந்த விஷயத்திலே தீர்க்கமாக ஏதுஞ் சொல்ல என்னால் முடியவில்லை" என்று பெரிதுங் கவலைகூரச் சொன்னான்.

'இருதலைக் கொள்ளியுள் ளெறும்புபோலானேன்'

கமலாட்சி சற்று நேரம் மாதும் பேசாளாய்ச் சிந்தையுடனிருந்துவிட்டுப் பின் நெட்டுயிர்த்துத் தன் தமயனை நோக்கி "அண்ணா, இன்று பின்னேரம் நான ஊருக்குப் புறப்படலாமென யோசிக்கிறேன்" என்று சொன்னாள்; "ஏன்? தங்காய், அவசரப்படுகிறாய்? வந்தநீ இன்னும் இரண்டு நாள் தங்கிப் போதற்காகிய சௌகரியங்கள் இங்கேயுண்டு; உன் கேள்விக்கு நான் உடன்படவில்லையென்று மனத்தாபப் படுகிறாய் போலும்; என் அருமைத் தங்காய், என் அந்தரங்க நோக்கத்தை யெல்லாம் உனக்கு உள்ளபடி யெடுத்துச் சொல்லிவிட்டேன்! என் மனநிலையை நீ இப்போது நன்கறிந்து கொண்டாயென் றெண்ணுகிறேன; இதனால் என்னை நீ வெறுப்பது ஞாயமல்ல; உன்னிடத்தில் நான் வைத்த அன்பும், என்மீது நீ கொண்டுள்ள விசுவாசமும் நேற்றின்று தொடங்கியனவல்ல; இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் உன்னெண்ணப்படி நான் நடக்காவிட்டாலும், நீ அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பரிவுடன்சொன்னான பத்மநாதன். "அண்ணா, இப்படியான கருமத்தில ஒருவரை யொருவர் வெறுப்பதும குறைசொல்வதும முறையல்ல என்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன்; நான அவசரப்படுவது வேறொன்றுக்குமல்ல; என் வரவை ஆவலோடு எதிர்பார்த்தவண்ணமிருப்பாள் வனசா; அவளிடம் விரைவிற்போய் நான் உள்ளதைச்சொல்லிவிட வேண்டும்; சொன்னால் அவள் மனநிலை என்னாகுமோ, கதியென்னாகுமோ நானறியேன்; வனசாவும் இலேசானவளல்லள்; அவளுடைய கண்ணிலிருந்து ஒரு துளி நீர் சிந்தினால், அது ஆரைப்போய்த்தாக்குமோ நான் அறியேன்; தெய்வத்திற்குத்தான் தெரியும்; மேலும் அவளைக் கலங்கவிட்டு, ஆவலோடிருக்க விட்டு நான் இங்கு ஒரு நிமிஷமேனுந் தங்குவது முறையல்ல; என்னைத் தடுக்காதீர்கள், அருமையான அண்ணா அந்திவேளைப் புகைரத மார்க்கம் பயணஞ் செய்ய அநுமதி தாருங்கள்" என்று கண்களில் நீர் ததும்ப இரந்து கேட்டாள் கமலாட்சி; "ஐயோ! இருதலைக்கொள்ளியுள் ளெறும்புபோலானேன்" என்று சொல்லிக் கவலைப்பட்டான் பத்மநாதன். (வரும்)

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### 63-ம் ஆண்டுப் பொதுக் கூட்டம்

மேற்படி சபையின் 63-ம் ஆண்டுப் பொதுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை (19-8-51) பிற்பகல் மேற்படி சபை ஆசிரம மண்டபத்தில் நடைபெற்றது; திரு இ. சிவகுருநாதரே தலைமைவகித்தனர்; சென்ற ஆண்டுப் பொதுக்கூட்ட நிகழ்ச்சியும், அவ்வாண்டிற்குரிய வரவு செலவுக் கணக்குப்பத்திரமும் படித்து ஏற்கப்பட்டன. திரு. இ. சிவகுருநாதரே தலைவராகவும், திரு. த. முத்துசுவாமிப்பிள்ளையும், டக்ரர் க. குருசுவாமியும் உபதலைவர்களாகவுந் தெரிவு செய்யப் பெற்றனர். காரியதரிசி உபகாரியதரிசிகளாக முறையே, திருவாளர்கள் கா சண்முகமும், சு. செல்வராசாவும தெரிவு செய்யப்பட்டனர்; ஸீ' தொகுதியிற் புதிய அங்கத்தவர்களாக, திருவாளர்கள் A. முத்துத்தம்பி, A சரவணமுத்து, A. செல்லப்பா என்னும் மூவரும் தெரிவு செய்யப் பெற்றனர்.

## பௌத்த குருமாருக்கு எச்சரிக்கை

நிதிப்பகுதி மந்திரியாகிய திரு. J. R. ஜயவர்த்தன சென்றவாரம் ஒரு பௌத்த வித்தியாசாலையிற் கூடிய ஒரு கூட்டத்தில் அவைத் தலைமை வகித்துப் பேசுகிறபோது "இந்த இலங்கையிலே பல சமயத்தவர்களும பாஷையினரும் இருப்பதனால், பௌத்த குருமாரா யுள்ளவர்கள் பௌத்த சமயத்தையும் சிங்கள மொழியையும்பற்றிப் பேசும்போது, ஏனைய சமய வாதிகள் மொழியினர் மனம் சிறிதும் புண்படாவண்ணம் அவதானமாகப் பேசவேண்டும" எனப் பௌத்த குருமாரை எச்சரித்தனராம்.

# அற வாழ்வு

1-ம் பக்கத் தொடர்ச்சி

அதனை வளமாகக் கற்று, பாக்கள் பல இயற்றி அறம்பற்றிக் குறித்துச் செல்லினும், அவர்கள் நோக்கமெல்லாம், மண்ணுலகு நாம் திண்ணம்: நம் வாழ்வெல்லாம் மாயம்; மாயையின் உருவே பெண் எனவும் பிரத்தித் திரிய போலி வேதாந்தக் கொள்கைகள் அவர்கள் நூல்களில் மிகுதியும் இடம் பெற்றுள்ளன. அந்தோ! வடவர்கள் பெண் தெய்வங்களைக் காமக் கருவிகளாகக் கொண்டவர்களே யொழிய, வாழ்வின் துணைசெய்யும் ஓர் ஒப்புறவள் பெண் என்பதை உணர்ந்தவர்கள் இலர் என்பதை அவர்கள் நூல்களே நமக்குத் தெள்ளிதின் விளக்கிக் காட்டிவண்ணமுள்ளன. இவர்கள் வழியைப் பின்பற்றி வையப்பு முறையெல்லாம் வடவர்கள் தன்மையேகொண்டுள்ளதென்று திருக்குறள்பற்றிக் கருத்துரைதரும் அன்பர்கள், வள்ளுவர் வடவர்களுடைய துறவை ஆதரித்து நிற்காமையை அருகித்தருகிக் கண்டின்புறுக.

வள்ளுவப் பெருந்தகையார், தவ வாழ்க்கை மேற்கொள்வோரின் இயல்பைப்பேசவந்தகாலத்து, தவஞ் செய்வார்க்குத் தியதென்று உலகத்தாரால் சொல்லப்பட்டவைகளை நீக்கி விடுவாராகில், அவர் தலையில் உள்ள சிகையைப் போக்கி, மொட்டையாக்கிக் கொள்ளுதலும், அச்சிகையைச் சடையாக முறுக்கிவிட்டுக் கொள்ளுதலுமாகிய வேடங்கள் வேண்டுவதில்லை என்கிறார்.

"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்    —குறள்

"உலகத்தாருண்டென்பதில்லென்பான் வையத்தலகையா வைக்கப்படும்" என்ற பெருநாவலர் கருத்தை ஒருபுறம் வைத்து, "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற தொல்காப்பியருடைய ஆழ்ந்த பொருளுரையை மறந்தொருபுறம் அமைத்துக்கொண்டு நோக்கின, அருமை பெருமை வாய்ந்த சான்றோர்கள் எல்லாம் வகுத்துச் சென்ற நெறி இல்லற நெறியேயன்றி வேறல்ல என்பதை நாம் உணர்வோம். ஆதலால் அந்நெறியே அறநெறியாகும் என்பதையுங் காண்க. "அறத்தாற்றனில்வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்?" என்ற வள்ளுவர் வினாவையிட்டுக் கேட்டால், அறவாழ்வின் தேற்ற இல்லறமே சிறந்ததெனப் புலப்படும். துறவாடை பணித்து நூறு நூற்றுறந்த முழுஞானிபோல் நடித்து, செய்யத்தகாத செயல்களையெல்லாம் செய்து, மானத்தை மங்கவைத்து, விற்று, காடெல்லாம் நாக்குழலைச் சிரிக்கும் வாழ்வு வாழ்வதைவிட இல்லறவாழ்வு சிறந்ததல்லவா? ஒருவன் தன் வாழ்நாளில் கருத்தொருமித்துக் காதலின்பங் கண்ட தன் மனைவியையும், அவள்பாற்றோன்றிய அன்புடை மக்களையும் பிரியாதிருந்து, அவருடன் தானும் மேற்கொள்ளும் தமிழ் நாட்டவர் வழக்கே சிறந்தது. இதற்கு உடன்பாடல்லாத, வடவர் கொள்கை எள்ளி நகையாடற்பாலதாம். அவர்கள் மேற்கொண்ட துறவு வாழ்க்கையினும் தமிழர் மேற்கொண்ட தவ வாழ்க்கையே பலவற்றுளும் சிறந்ததென்பது இனிது புலனாகும். மனைவி மக்களைத் துறந்து செய்வதாகிய துறவு இல்லை காண்போர்க்கு வெருட்சியே அளித்து நிற்கும். மனைவாழ்க்கையில் இருப்பவர்க்கான் முப்பத்திரண்டு அறங்களையும், தம் உரிமைச் சுற்றமொடு இருந்து செய்துவர, நல்வாழ்வு பெறுவார்கள் கணவனும், மனைவியும் என்பதே தொல்காப்பியர் கருத்து.

அறங்கள் முப்பத்திரண்டு

"ஆதுலர்க்குச் சாலை,
ஓதுவார்க்கு உணவு,
அறுசமயத்தோர்க்கு உண்டி,
ஆவிற்கு வாயுறை,
சிறைச் சோறு, ஐயம்,
தின்பண்டம், மகச்சோறு,
மகப் பெறுவித்தல்,
மகவளர்த்தல், மகப்பால்,
அறவைப் பிணஞ்சுடல்,
அறவைத் தூரியம்,
வண்ணார், நாவிதர்,
வதுவையாற்றல், நோய்,
மருந்து, கண்ணாடி,
காதோலை, கண்மருந்து,
தலைக் கெண்ணெய்,
பெண்போகஞ், அண்ணம், பிறர்துயர்
காத்தல், தண்ணீர்ப்பந்தர்,
மடம், தடம், கா,
ஆவிற்கு உரிஞுதறி, ஏறு விடுத்தல்,
விலை கொடுத்துக் கொலை
யுயிர்மீட்டல், விலங்குணவு
இச் செயல் முப்பத்திரண்
டறமென்ப"    —திவாகரநிகண்டு.

ஆசிரியர் தொல்காப்பியனார் காட்டிய வழியிலேயே, பண்டு, வடநாடு, தென்னாடுகளில் வாழ்ந்த முனிபுங்கவர்கள் நின்றார்கள் எனத் தெரிய வருகிறது. வடநாட்டு முனிவர்களாகிய மரீசி, அத்திரி, அங்கிரசர், புலகர், கிரது, புலத்தியர், வசிட்டர் முதலாயினோரெல்லாம் தத்தம் மனைவியோடிருந்து, தவஞ்செய்தமையும், தமிழ் நாட்டில் மங்காப் புகழுடன் வாழ்ந்த பாலைக்கௌத்தமனார், திருவள்ளுவர், நக்கீரர் முதலாயினோரும் தத்தம் மனைவியோடிருந்து தவமியற்றி, ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதி வடிவினனும், தாட்டாமறைக் காட்டித் தன் கருணைத்தேன்காட்டும் வித்தகச் செம்மல் திருவடிப் பேரின்பத்தை எய்தினமையுமே சான்றும். இது குறித்தன்றோ தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

"அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று" [அஃதும்
    — குறள்.

(தெ - பொருள்) இல்லறந் துறவறம் என்னும் இரண்டறங்களுக்குள்ளே நூல்களால் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே. மற்றைத் துறவறமோ என்றால் பிறரால் நிந்திக்கப்படும் கூடாவொழுக்க மில்லாதிருந்தால் அதுவும் நன்மையுடையதென்பதாம். மேற்கண்ட குறளால் நாம் அறிவது அற வாழ்க்கை என்பது இல்வாழ்க்கையே என்றார்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற்
    [புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்?"    —குறள்

(தெ - பொருள்) ஒருவன் இல்லற வாழ்க்கையைத் தரும வழியிலே செலுத்துவானாகில் மனைவி மக்களை விட்டு வனத்திலே சென்று தவஞ் செய்து அடையும் பயன் எது இருக்கிறதென்பதாம். பாவத்திற்குப் பயந்து நல்லவழியால் சம்பாதித்த பொருளை முன் சொன்னபடி பகிட்டுக்கொடுத்தலும், அன்புடைமை என்பதாகும் - என்று கூறமாற்றுல் துறவுகளை புகுதல பயனில்லையென்றக் தொல்காப்பியர் வழியே கடைபிடித்துக் கூறியதோடு, துறவு என்பது நெஞ்சினுற் துறத்தலே என்றும் யான் எனற அகப்பற்றும், எனது என்ற புறப் பற்றும் ஒருங்கறுத்தலேயாம் என்பதை வலியுறுத்தும் முகமாக,

"நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல்
    [வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்"
என்றும்,
"யான் எனதென்னுஞ் செருக்கறுப்பான்
    [வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்."
என்றும் அருளியுள்ளார்.

இல்லறத்தில் காதல் மனைவியோடிருந்து, சாலும் அறத்தைப்பேணி வளர்த்தலும், தியவழிகளில் மனத்தைச் செலுத்தாது நீக்கலும், உண்டாட்டுக் களியாட்டுகளை ஒளவையோடு நிறுத்தி வைத்தும், கணவனும் மனைவியும் தவ வாழ்க்கை மேற்கொண்டு, உளவொளி பெற்று இறைவனுடன் ஒன்றுவதே அறவாழ்வின் முடிந்த முடிபாம்.

# மகளிர் மன்றம்

## தாய்மார் அனுசரிக்கவேண்டிய சுகாதார முறைகள்

I

தாய்மார்களாகவும், சகோதரிகளாகவும், மன்றி மருத்துவிச்சிகளாகவும் விளங்கும் ஒவ்வொரு பெண்ணும் கர்ப்ப கால சுகாதார முறைகளை அறிந்திருத்தல் மிக முக்கியமாகும். பெண்கள் தங்களுக்குரிய சுகாதார விதிகளை அறிந்திராததினாலேயே குழந்தைகள் அநேக வியாதிகளையும் துன்பங்களையும் அனுபவிக்க நேருகின்றது; அதனால் பல பாலகர்கள் இறந்தும் விடுகின்றனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள் ஒருவயது வருமுன்னரே இறந்துவிடுகின்றன; இறக்காது தப்பிப்பிழைத்திருக்கும் குழந்தைகளும் தேகாரோக்கியம் குன்றிக் காணப்படுகின்றனர்; மேலைத் தேசங்களிற் கர்ப்பிணிகளுக்குரிய பல சுகாதார முறைகளைப் பெரிதும் அவதானித்து வருகின்றனர். ஆகையால் அந்நாடுகளிற் குழந்தைகள் இறப்பது மிகவுங் குறைவு. இங்கிலாந்தில் ஆயிரத்திற்கு முப்பது வீதமும், அமெரிக்காவில் அறுபத்தெட்டு வீதமுமே குழந்தைகள் இறக்கின்றார்கள். ஆனால் இந்தியாவிலோ ஆயிரத்திற்கு நூற்றெழுபத்தைந்து குழந்தைகள் வீதம் முதலாம் ஆண்டிலும், மேலும் நூற்றைம்பது குழந்தைகள் வீதம் ஐந்தாம் பிராயத்துள்ளும் இறந்து விடுகிறார்கள். இலங்கையிலோ இத்தொகை இன்னும் அதிகரித்துக் காணப்படுகிறது பிறந்த முதலாமாண்டில் ஆயிரத்திற்கு, சராசரி நூற்றுத் தொண்ணூற்றைந்து வீதம் குழந்தைகள் மரிக்கிறார்கள்: சில பாகங்களில் மூன்றூறு குழந்தைகள் வரையிலும் இறந்து விடுகிறார்கள். மிகுதியா யுள்ளவர்களின் தேகாரோக்கியம் குறைபிருப்பதுமன்றி, தோற்றத்திலும் மிகக் குறுகிய வளர்ச்சியுடனேயே காட்சியளிக்கிறார்கள். மக்களின் தேகாரோக்கியத்தினாலேயே அவர்கள் ஆயுளும் நீடித்திருக்குமென்பது எல்லோரும் அறிந்த ஓர் விஷயமாகும். ஆகவே இங்கிலாந்தில் மக்கள் சராசரி ஐம்பத்தாறு வயது வரையும், இந்தியாவில் இருபத்திரண்டுவயது வரையும், இலங்கையில் முப்பது வயது வரையிலுமே மனிதர் சீவிக்கிறார்கள். குழந்தைகளை வளர்க்க வேண்டிய முறைகளைத் தாய்மார் அறிந்திராததினாற்றான் மக்கள் இவ்வகல மரணத்திற்கு உள்ளாகின்றனர் என்பது மறுக்க முடியாத ஒரு உண்மை. குழந்தைகளின் வளர்ச்சிக்குரிய சிறந்த உணவுகளைத் தாய்மார் ஊட்டுவதில்லை. சுகாதாரத்திற்குரிய முறையில் அவற்றிற்கு உடை அணிவதுமில்லை. இக்குறைகளினாற் குழந்தை பல வீனுகவே வளர்கின்றன. அத்துடன் நோய்களை எதிர்க்குஞ் சக்தியுமின்றித் தவிக்கின்றது. ஆகவே மேலை நாட்டுப் பெண்களைப் போலவே இந்நாட்டுப் பெண்களும் சுகாதாரம், தேகாரோக்கியம் முதலியவற்றில் முக்கியசிரமஞ் செலுத்தினாலேயன்றி மக்கள் எப்பொழுதும் பிணியாளர்களாகவேயிருக்கவேண்டி நேரிடும். எனவே பெண்கள் தங்கள் குருட்டு நம்பிக்கைகளைக் கைவிட்டு, ஆரோக்கிய முறைகளைக் கற்று, தங்கள் நாளாந்த வாழ்க்கையில் அவற்றைக் கையாள்வது மிக அவசியமாகும்.

ஒரு நாட்டு மனிதர் தேகாரோக்கியமும் பலமுமுள்ளவர்களாக வாழவேண்டுமாயின் அப்பெரும் பொறுப்பு அந்நாட்டுப் பெண்களிடமே தங்கியிருக்கின்றது. வீட்டிலே தாய்மாரே தங்கள் குழந்தைகளின் தேகசுகத்தைப் பேணவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆகவே, பெண்கள் குழந்தை வயிற்றிலிருக்கும்பொழுது அவதானிக்கவேண்டிய சில விதிகளை இங்கே கூறுவோம். குழந்தை பிறப்பதற்கு ஒன்பது மாதங்களுக்கு முன்னரே சிசு கருப்பையிற்றோன்றி வளர்கின்றது. குழந்தை வயிற்றினிருக்கும் வரையிற் சுவாசிக்கும் காற்று ஆகாரம் முதலியவற்றைத் தாயின் உதிரத்தினின்றே பெறுகின்றது. குழந்தையுடலிலிருந்து வெளியேறும் அசுத்தப் பொருள்களும் மீண்டும் தாயிடமே போய்ச் சேருகின்றன. ஆகவே இவ்வொன்பது மாதங்களிலும் தாய் தன் சுகாதாரத்தைப் பேணுவது இன்றியமையாததாகும்.    (வரும்)

## கருங்கற் சிம்மாசனம்

### பொலனறுவைக்குக் கொண்டுபோக உத்தேசம்

இற்றைக்கு 800 ஆண்டுகட்கு முன் இலங்கையை யாண்ட கீர்த்தி நிசங்கமால என்னும் அரசன் தான் கொலுவீற்றிருப்பதற்குக் கருங்கல்லினுல் ஒரு பெரிய சிங்கத்தை ஆக்குவித்து அதிலிருந்து அரசு செய்தானென்று சரித்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது; இந்தச் சிங்காசனம் அக்காலத்திலே, தலைநகராயிருந்த பொலனறுவை அழிந்தொழிந்தபோது நிலத்துட் புதைந்து கிடந்து பின்னர்க் கண்டெடுத்து மிக்க கஷ்டத்துடன் கொழும்பு நூதனசாலையிற் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது; இப்படிக் கருங்கற் சிங்கம் கொழும்பிற் கொண்டு வந்து சேர்க்கப்பட்ட காலம் இற்றைக்கு 74 வருடங்கட்கு முன், அதாவது ஸேர் வில்லியம் கிறேக்கரி இலங்கைத் தேசாதிபதியாகவிருந்த காலத்திலாகும்; இதனை இப்பொழுது பழையபடி பொலனறுவையிற் கொண்டுபோய் வைப்பதற்குப் புதைபொருளாராய்ச்சியதிகாரிகள் உத்தேசித் திருக்கின்றனராம்.

இலங்கையின் மிகப் பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

L K S LEBBAY BROS
GOLD HOUSE
தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதர்ஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

கடிதம்

# பாடசாலைகளிற் சமயக் கல்வி

சமயமில்லாத கல்வி கல்வியன்று. கல்வியின் குறிக்கோள் மனிதனிடத்துள்ள கெட்ட குணங்களைப் போக்கி அவனைத் தூயவனாக்குதலே. அதாவது மனிதனை உத்தம வாழ்க்கைக்கு வழிப்படுத்தி விடுதலாகும். இதனைக் கல்வியாராய்ச்சி விற்பன்னர் பலரும் ஒத்துக்கொள்வர். சாஸ்திரக்கல்வி தொழிற்கல்வி என்பன வாழ்க்கையை வளம்படுத்துவனவாயினும், சமயக்கல்வியில்லாத வழி ஒருவர் புனித வாழ்க்கையை நடத்துதல் முடியாது.

இளம் உள்ளத்தைப் பண்படுத்துவதற்குச் சமயக்கல்வி அவசியம். விதிவிலக்குக்களும், அவைகள் கற்பிக்கும் பாலபுண்ணியப் பலன்களும் குழந்தை உள்ளத்தில் நன்கு பதிகின்றன. பாவச் செய்கைகளைச் செய்தால் தீமைவரும். புண்ணியச் செய்கைகள் நன்மைதரும் என்ற உணர்ச்சியினால் குழந்தை தூண்டப்பெற்றுச் சிறு பருவத்திலேயே நல்வழியில் நடக்கப் பயில்கிறான். இப்பயிற்சி அக்குழந்தையின் வாழ்க்கைப் பாதையை எப்பொழுதும் புனிதப்படுத்திக்கொண்டே செல்லும். எனவே சமய சாஸ்திரங்கள் கூறும் கற்பனைகள் இளம் வயதிலே கற்பிக்கப்படல் வேண்டுமென்பது வெள்ளிடை மலை.

உத்தமத் துறவி விவேகானந்தர், காந்தியடிகள் முதலிய பெரியார்களின் சிறுபருவ வாழ்க்கை சமயத்தோடு தொடர்புற்றிருந்தது. காந்தியடிகள் தமது குழந்தைப் பருவத்தில் தமது தாயாரின் சமயானுட்டானங்களைப் பின்பற்றினர். இவர்கள் உலகப்பெரியோராய் விளங்கியதற்கு முதற் காரணம் அவர்கள் இளம் உள்ளத்திற் பதிந்த சமய வாழ்க்கையே என்பது மிகையாகாது.

எனவே இளம் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டும் பாடசாலைகளுக்குச் சமயக் கல்வியைப் பொறுத்தமட்டில் பெரிய பொறுப்பு உண்டு. மதஸ்தாபனங்கள் இவ்விஷயத்தில் மிகுந்த அக்கறை காட்டவேண்டும். நாவலர் பெருமானின் கன்னோக்கத்தின்படி அநேக ஊர்களில் சைவபாடசாலைகளைத் தாபித்து நடத்தி வருகின்ற "சைவ வித்தியா விருத்திச் சங்கத்தார்" தமது பாடசாலைகளிற் சமய போதனை நன்கு நடைபெறுமாறு செய்தல் வேண்டும். ஆசிரியர்களும் தாம் வருங் காலத்தில் ஒரு சற்சன உலகை திருமாணிக்கும் சிற்பிகள் எனத் தம்மை நினைத்துப் போதனையாலும் சாதனையாலும் சமய வாழ்க்கைக்கு வழி காட்டவேண்டும்.

சமயபாடம் பாடத் திட்டத்தில உளதாயினும் பல பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் அப்பாடத்தை மிக்க அக்கறையுடன் கற்பிக்கின்றனர். இவர்கள் செய்வதே உண்மையான கல்வித் தொண்டாகும். இன்னும் பல பாடசாலைகளிலுள்ளார் "சமயபாடம் கல்வித்திட்டத்தில் அமையாத தொன்று; மேலதிகாரிகள் நம்மை அதைப் பற்றிக் கேட்க மாட்டார்கள்" என எண்ணிக்கொண்டு அவ்விஷயத்திற் பராமுகமாயிருக்கின்றனர். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் செய்யும் கடமை மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மாத்திரம் அன்று என்பதை இவர்கள் உணர்வதில்லைப்போலும்.

சமாதானமான அரசியலைத் தேசத்தில் நிலைநாட்ட வேண்டுமாயின் அத்தேசத்து மக்களுக்குச் சமயக் கல்வி மிக அவசியமாகும். அரசினர் இதனை யோசித்துத் தமது பொறுப்பிலுள்ள பாடசாலைகளிலும், தமது கண்காணிப்பின் கீழுள்ள பாடசாலைகளிலும் சமயக் கல்வியைக் கிரமமாகப் போதிக்கத் தக்க வழிவகைகளைச் செய்வார்களாக.

அரசாங்கமும், மதஸ்தாபனங்களும், பாடசாலை அதிகாரிகளும், ஆசிரியர்களும் இவ் விஷயத்திற் கூடிய சிரத்தை எடுத்து வருங் காலத்திலாயினும் சமய வாழ்க்கையும் அதன் பயனாகச் சமாதானமும் நிலவுமாறு செய்வார்களாக.

சி. சோமசுந்தரம்
ஆசிரியர், உடுவில் கிழக்கு

கடிதம்

## "மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்"

கௌரவ பத்திராதிபர் "இந்துசாதனம்"

ஐயா,

தாங்கள் இம் மாதம் 22-ம் திகதி (7-8-51) செவ்வாய்க் கிழமை எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் சௌகரியங்கள் அற்ற கோயிலாக மாவை கந்தசுவாமி கோயிலை எழுதியது எமது மனத்தைப் புண்படுத்தியுளளது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு, பத்திரிகை வாசிப்போருக்காக, உங்கள் எடுத்துக்காட்டுத் தவறானது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். கந்தசுவாமி கோவிலின் புறவீதியாகிய 3-ம் திரு வீதியில் ஒவ்வொரு திசைக்கும் கிணறுகள் உள. அவைகள் யாவும் பெரும்பாலும் இரண்டு துலாக்களுடனும், மேலும் தண்ணீரை வெளியே எடுக்கக்கூடிய இழுப்புக் கயிற்றுப் பட்டைகளுடனும் திருவிழாக் காலங்களில் இருந்தன என்பதற்கு யாத்திரிகர்களே போதுமான சாட்சி பகருவர். தெற்குத் திருவீதியில் மாத்திரம், இருகில் வற்றாத கிணறுகள் மூன்று உள. புறவீதியிலிருந்து உட்கோவிலுக்குள் புகுவதற்கு மூன்று வாசல்கள் உள. அவ்வாசல்களுக்குப் பக்கத்தே எளிதில் வற்றாதநகரிய கிணறுகள் உள. சிறப்பாகத் தெற்கு வாசலில் உள்ள கிணற்றுக்குப் பக்கத்தே 200 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தொட்டியொன்று கட்டப்பட்டு, உற்சவ காலங்களில் தொட்டியில் தண்ணீர் நிரப்புதற்கு அதன் சொந்தக்காரரே பொறுப்பாளியாக நின்று யாத்திரிகர்களுக்குத் துணை செய்கின்றார். மேற்படி கோவிலுக்குச்சொந்தமான மடங்களுக்கும் திருவீதிக்குமாக எட்டுக் கிணறுகள் உள. ஆகவே தண்ணீர் வசதியில்லை என்பது பெரும் தவறாகும். பல தண்ணீர்ப் பந்தல்களும் வைத்து நடாத்துகின்றார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். திருவீதிகள் யாவும் உற்சவாரம்பத்திற்கு முன்னரே மிகவும் நன்றாகச் சுத்தஞ்செய்யப்படுகின்றன. யாத்திரிகர்கள் பெருந்தொகையினராக வருகின்ற கார்த்திகை, வேட்டை, பெரியசப்பரம், தேர்த்திருவிழா நாட்களில், பொதுவாக யாத்திரிகர்களின் வசதிக்காகவும், சிறப்பாக அங்கப்பிரதக்கணம் செய்வோருக்காகவும் ஒரு முருக பக்தரால் வீதிகள்யாவும் சாஞ் செறிப்படி நன்றாக கவிப்பது யாவரும் அறிந்த உண்மை. 10,000 க்கு மேலாக யாத்திரிகர்கள் வந்தாலும் தங்கக்கூடிய மடங்கள், மண்டபங்கள், மர நிழல்கள், தற்காலிகமாக நிருமாணிக்கப்படும் பந்தல்கள் இன்னபிறவும் உள. கேணிகளை இக்காலத்து மக்கள் அதிகம் விரும்புவதில்லை. அவைகள் இக்கால நாகரிகத்திற்கும், சுகாதாரக் கொள்கைக்கும், வசதிக்கும் பொருத்தமானவைகளல்ல.

சிற்க, கந்தசுவாமி கோவிலின் கட்டடங்கள் சிதைவுற்றுக் கிடக்கின்றன என்பதை ஒத்துக் கொள்ளுகின்றேன். நித்தியநைமித்தியங்கள் செய்வதற்கே ஆலய வருமானம் போதாது இருக்கின்றமையினால், ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்குப் பொருள் இல்லை என்றே சொல்லவேண்டியிருக்கின்றது. ஆலயம் தற்சமயம் சொற்ப வருமானமுடையதாக இருப்பதை விஷயமறிந்த மக்கள் உணருவர். ஆகையால், ஆலயப் புனருத்தாரணத்துக்குப் பணம் படைத்த சைவப் பெருமக்கள், முன்னுள் அதிகாரிகளுடன் ஏதும் பகைமை இருந்தாலும் அவையாவற்றையும் மறந்து, தங்கள் மேற்பார்வையிலோ அல்லது ஆலய ஆதீனகர்த்தரின் மூலமாகவோ சிறந்த திருப்பணி செய்யும்படி மாவைக் கந்தப்பெருமான் அருளால் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

க. கதிரமலையான்.

மாவிட்டபுரம்
தெல்லிப்பழை
14—8—51.

## திருச்சி ரேடியோ

### * இசைத்தட்டு

**திருச்சி புதன் ஆகஸ்ட் 22**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கே வி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 புல்லாங்குழல் * 2 தமிழில்செய்தி 2 10 பயித்ரா சட்டர்ஜி வீதார்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 இருவயலினகள் ஆ இரே வித்வான்கள் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 சீனக்கேட்டவை * 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 எம் எஸ் சுப்புலக்ஷ்மி * 7 45 மாகாண முன்னேற்றம் பேச்சு 8 திருமணம் நாடகம் 9 ஆங்கிலத்திலசெய்தி 9 15 கே வி நடராஜன் பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் ஆக 23**

காலை 7 10 கீதாரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 8 ஆங்கிலத்திலசெய்தி 8 15 காலை இசை* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 வழுபடுபாடு * 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 செம்மை வைத்தியநாத பாகவதர்* 2 தமிழில்செய்தி 2 10 வீ ஏ பரல்லாரா பியானோ * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு. 5 30 தில்ருபா ஆ இ ரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில்செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 குரல்வளை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம்* 7 40 தானவடிவம் 8 முடிகொண்டான் வெங்கடராமய்யர்பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருக்கோயிலூர் எஸ் அலமேலு பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி ஆக 24**

7 10 கீதாரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 எம் ஷண்முகசுந்தரம் பாட்டு 8 ஆங்கிலத்தில்செயதி 8 15 பாமாலை * 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 மன்னார்குடி சே சாவித்ரி அம்மாள் கோட்டுவாத்யம் * 2 தமிழிலசெய்தி 2 10 வாத்யகோஷ்டி * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 எ கே ராஜு நாயுடு நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்திலசெய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை * 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சக்கிரியைவின் கதை 7 45 நமது தபால் பெட்டி 8 கிருஷ்ண ஜனனம் 9 ஆங்கிலத்திலசெய்தி 9 15 எ கே ராஜு நாயுடு நாக்ஸ்வரம் 10 முடிவு.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

**திறமான தேக்கமரங்கள்**

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி றோட்

யாழ்ப்பாணம்

Std 2

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday August 21, 1951